**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 220/2020 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா. 2 |
| Name : | திரு. ராயப்பன் |
| Father's Name/Husband Name: | திரு. ஆறுமுகம் |
| Village : | கொளப்பாடி |
| Taluk : | குன்னம் |
| Age : | 52/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 11.02.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி சின்னதுரை ஆஜர்)**
**முதல் விசாரணை**

நான் தற்போது கொளப்பாடி கிராமத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 செல்வியைத் தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு நான் என் வீட்டில் இருந்தேன். அ.சா.1க்கும் எதிரிக்கும் இடையே அவர்கள் வீட்டிற்கு இடைப்பட்ட பகுதியில் சண்டை நடந்தது. காலை நேரத்தில் நடந்தது எதிரி குச்சியால் அ.சா.1ன் தொடையில் அடித்தார். அதில் அ.சா.1க்கு கால் வீங்கி விட்டது. அ.சா.1 மருத்துவமனைக்கு சென்றார். போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 செல்வி எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனது அண்ணனின் மனைவி ஆவார். அ.சா.1 குடும்பத்திற்கும் எதிரியின் குடும்பத்திற்கும் பாதை சம்மந்தமாக வழக்கு நடைபெற்று முன்விரோதம் இருக்கிறது என்றால் சரிதான். சண்டை நடக்கும் போது நான் சத்தம் கேட்டதால் நான் வீட்டிலிருந்து வந்தேன் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரி வீட்டிற்கு

செல்லும் நடைபாதையில் கருவேலி முற்கள் வளர்ந்து இருந்தது சம்மந்தமாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்து அதில் வருவாய்த்துறையினர் வந்து அந்த இடத்தை அப்புறப்படுத்தினார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. பாதையில் எதிரி நடக்கக்கூடாது என்பதற்காக எனது அண்ணி கொடுத்த பொய்யான வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி அ.சா.1யை குச்சியால் அடிக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.